ருப்பதாகச் சொல்லப்படுகிறது. ஆகவே அதுபோன்று நம்முடைய அதிகாரிகளும் காரில் செல்வதைத் தவிர்க்க மாற்று திட்டங்கள் ஏதேனும் தமிழக அரசினிடத்திலே இருக்கின்றதா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தலைவரவர்களே, நாம் எல்லாம் அலுவலகத்திற்கு வந்து சேர வேண்டும் என்று நினைக்கிறோம். நமக்கெல்லாம் குதிரையேற்றம் தெரியாது. ஆகவே குதிரையின் மீது போக முடியாது அதைக் கற்றதற்குப் பிறகு வேண்டுமானால் அதைப்பற்றி யோசிப்பாம்.

திரு. ந. குலசேகர பாண்டியன்: தலைவரவர்களே, தற்போது எல்லா இடங்களிலும் டாக்சிகள், ஆட்டோக்கள் போன்றவற்றிற்கு ஃப்ளாட் ரேட்டாக 5 ரூபாய் கொடுங்கள் 10 ரூபாய் கொடுங்கள் என்று கேட்கிறார்கள். அப்படி ஓட்டுகின்றவர்களுக்கும் லைசன்ஸ் கிடையாது. ஆகவே அப்படிப்பட்டவர்கள் மீது அரசு நடவடிக்கை எடுத்துள்ளதா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தலைவரவர்களே, அடுத்த கேள்வி இது சம்பந்தமாகத்தான் வருகின்றது. அரசாங்கம் இப்போது முறையான நடவடிக்கை எடுத்து இப்போது அந்த நிலைமை கொஞ்சம் சரி செய்யப்பட்டு இருக்கின்றது. அடுத்த கேள்வி இது சம்பந்தமாக வருவதால் அதற்கு பதில் விளக்கமாகச் சொல்லப்படும்.

திரு. பி. எம். தங்கவேல்ராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசு அரபு நாடுகளிலே இருந்துதான் இப்போது பெட்ரோலைப் பெற்றுக்கொண்டு வருகின்றது. ஏனென்றால் இந்தியாவிலே பெட்ரோலியம் கிடையாது. ஆகவே அரபு நாடுகளிலே அண்மையிலே பெட்ரோல் விலையை உயர்த்தி இருப்பது அரசுக்குத் தெரியுமா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தலைவரவர்களே, இங்கே நாம் கட்டணத்தை உயர்த்தி இருக்கிறோம் என்றால் அதிலே இருந்தே தெரிகின்றது, அங்கே விலை உயர்ந்திருக்கின்றது என்று. ஆனால் அரபு நாடுகளிலே விலையினை உயர்த்தி இருப்பதையும் விட சற்று அதிகமாக நாம் உயர்த்தி இருக்கிறோம்.

Issue of meter certificates for Auto-Rickshaws and Taxis

*Q.No 255 –THIRU S.RAJARAMAN: Will the Hon. the Minister for Trausport be pleased to state—

a) Whether liceneed indivi uals have been allowed to issue meter certificates for Taxis and Auto-Rickshaws in Madras City; and

b) if so, the details there of?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: (அ) ஆம்.

(ஆ) டாக்சிகளில் பொருத்தப்படும் மீட்டர்களில் உள்ள குறைபாடுகளை நீக்குவதற்காக மீட்டர் திருத்துபவர்களுக்கு (மெக்கானிக்) அதிகாரச் சீட்டுகள் வழங்கப்படும், அதிகாரச் சீட்டு பெற்றவர்களுக்கு தனிப்பட்ட மீட்டர் முத்திரை வழங்கப் படும். அவர் சரி செய்த மீட்டரின் மீது அவருக்கு வழங்கப் பட்ட தனிப்பட்ட முத்திரையை இட வேண்டும். பின்னர் அந்தப் பகுதி வட்டாரப் போக்குவரத்து அலுவலர் மீட்டரை ஆய்வு செய்து அவரின் முத்திரையும் மீட்டர்மீது இடப்படும். இதில் அதிகாரச் சீட்டு பெற்ற மெக்கானிக் ஏதேனும் தவறு செய்வாரே யானால் அவரின் அதிகாரச் சீட்டு இரத்து செய்யப்படும்.

2. சென்னை நகரில் இதுவரை 29 மீட்டர் மெக்கானிக்கு களுக்கு அதிகாரச் சீட்டு வழங்கப்பட்டுள்ளது.

திரு. என். வரதராஜன்: தலைவரவர்களே, இன்றைக்கு இந்த பெட்ரோல், டீசல் விலை உயர்வு மிகப் பெரிய பிரச்சினை யாக இருக்கின்றது. இதனுடைய உண்மையான விலை 2 ரூபாய் தான் ஆனால் அதன்மீது மத்திய அரசு சுங்கவரி, சலால் வரி என்று போட்டு 4 ரூபாய் உயர்த்தி இருக்கிறார்கள். ஆகவே இப்போது 6 ரூபாய்க்கு விற்கவேண்டிய நிலைமை இருக்கின்றது. அதைக் குறைக்க வேண்டும் என்று மாநில அரசு மத்திய அரசுக்கு வற்புறுத்தி இருக்கின்றதா? அல்லது இனிமேலாவது வற்புறுத்துமா என்பதை அறிந்துகொள்ள விரும்புகிறேன்

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தலைவரவர்களே. ஏற் கெனவே இதுபற்றி இதே மன்றத்திலே ஒரு கேள்வி கேட்கப் பட்டது ஆகவே அந்த அடிப்படையிலே மத்திய அரசுக்கு நாம் எழுதி இருக்கிறோம் என்பதை நினைவுப்படுத்த கடமைப்பட்டி ருக்கிறேன் ஆனால் அப்படி எழுதி விடுவதன் மூலமாக எந்தப் பயனும் கிடைக்கவில்லை, கிடைக்கும் என்ற நம்பிக்கையும் எங்களுக்கு இல்லை.

திரு. உ. சுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, டாக்சிகளிலேயும், ஆட்டோ ரிக்ஷாக்களிலேயும், மீட்டர் திருத்தப்பட்டது என்று எழுதியிருந்தாலும கூட, மேற் கொண்டு மீட்டருக்கு 20 பைசா என்று வசூலிக்கிறார்கள் என்பது அரசுக்குத் தெரியுமா? அந்த நடவடிக்கையை தடுக்க என்ன முயற்சியை அரசு எடுக்கவிருக்கிறது என்று அறிய விரும்பு கிறேன்?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தலைவர் அவர்களே, இப்படிப்பட்ட தவறுகள் செய்கிறார்கள் என்பது அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறபோதுதான் தெரிகிறது. அவ்வப் போது நாங்கள் அதன்மேல் நடவடிக்கை எடுக்கிறோம்; எனவே பரவலாக இப்படி நடைபெறுவது ஓரளவு குறைக்கப்பட்டிருக் கிறது. எப்படி என்றால், தனியாக இதற்ென்று 12 ஆய்வாளர் களை போட்டு இதை கண்காணித்து வருகிறோம். இப்படிப்

பட்ட நடவடிக்கைகளை தடுப்பதற்காக எடுத்துக் கொண்ட நடவடிக்கைகளின் அடிப்படையில் கிட்டத்தட்ட 50 ஆயிரம் ரூபாய் அளவில் அபராதமாக வசூலிக்கப்பட்டிருக்கிறது. எனவே இதை தடுக்க தகுந்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கெ. சொக்கலிங்கம்: தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஆனால், ஆட்டோ ரிக்ஷாக்களை நாம் கூப்பிடுகிறபோது, அவர்கள் ஒரு கிலோமீட்டர், 2 கிலோ மீட்டர் தூரத்திற்குள் இருந்தால் வர மறுக்கிறார்கள். 3 ரூ. 5 ரூ. கொடு என்று கேட்கிறார்கள் என்று சொன்னால், அந்த உடனடியாக அமைச்சருக்குத் தெரிவிக்க வேண்டும் என்று அமைச்சர் அவர்கள் கூறுகிறார்கள். அதை எப்படி தெரிவிக்க முடியும்? அத்தோடு, அப்படி ஏதாவது செய்தால், அவர்கள் எல்லோரும் ஒன்றாக சேர்ந்து விடுகிறார்கள். அது மட்டுமல்ல இரவு நேரங்களில் 10 மணிக்கு மேல் பயணம் செய்ய நேரிட்டால் மேலும் 1 ரூபாய் கொடுப்பது என்பது பற்றிக் கூறினார்கள். ஆனால் 8 மணிக்கே அவர்களை அழைத்தாலும் அதிகமாகக் கேட்கக்கூடிய நிலைமை இருக்கிறதே, அதை அமைச்சர் அவர்கள் அறிவாரா? அதற்கு ஏதாவது ஆவன செய்ய முன் வருவாரா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. க. முத்துசாமி: தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்களுக்கு இப்படிப்பட்ட குறைகள் ஏற்படுகிறபோது நேரிடையாக எனக்குத்தான் சொல்ல வேண்டும் என்ற சூழ்நிலை இருக்க வேண்டும் என்கிற அவசியம் இல்லை. அங்கே இருக்கும் போக்குவரத்து துறை அதிகாரிகளுக்கோ அல்லது காவல் துறை அதிகாரிகளுக்கோச் சொல்லலாம். ஆட்டோ ரிக்ஷாக்காரர்கள் ஒன்றாக சேர்ந்து விடுகிறார்கள் என்று சொன்னார். அதற்கு நமக்கு பங்கு இருக்கிறது. இங்கே இருக்கிற அத்தனை அரசியல் கட்சிகளுக்கும் அங்கே யூனியன்கள் உண்டு. அந்தந்த கட்சிக்காரர்கள் தங்கள் சங்கத்தைச் சேர்ந்தவர்களை கட்டுப்படுத்தி வைக்கக்கூடிய அளவுக்கு நிலைமை இருக்குமேயானால், அரசாங்கத்தின் பணி எளிதாக இருக்கும்.

வேதாரண்யத்தில் நகரப் பேருந்து விடும் திட்டம்.

*வினா எண் 256—திரு. எம். எஸ். மாணிக்கம்: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேதாரண்யம் நகரில் நகரப் பேருந்து விடும் திட்டம் எந்நிலையில் உள்ளது?

(ஆ) அது எப்பொழுது நிறைவேற்றப்படும்?